விலை: சதம் 75 ★★

# ஈழநாடு
THE EELANADU

மலர் 23 கார்த்திகை 8 முஹரம் 25 இதழ் 281
யாழ்ப்பாணம் திங்கட்கிழமை 23-11-81

திருப்பத்தூர் உபதேர்தல்:

## எம்.ஜி.ஆரும் கருணாநிதியும் ஒரே மேடையில்?

சென்னை, நவ. 22

திருப்பத்தூர் உபதேர்தலில் அ.தி.மு.க. தலைவர் திரு எம். ஜி. ராமச்சந்திரனும் தி.மு.க. தலைவர் திரு. மு. கருணாநிதியும் தேர்தல் பிரசாரத்தில் நேரடியாக கலந்து கொள்ள வேண்டும் என்று இந்திரா காங்கிரஸ் தமிழ்நாடு தலைவர் திரு. கருப்பையா மூப்பனார் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

## எம். ஜி. ஆர் சுகம் விசாரித்தார்

சென்னை நவ. 22

சென்னை ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் முன்னாள் அமைச்சர் சட்ட மேலவை உறுப்பினர் திரு ம. பொ. சிவஞானம் திரைப்பட தயாரிப்பாளர் திரு ப. நீலகண்டன் ஆகியோரை தமிழ முதல்வர் திரு. எம். ஜி இராமச்சந்திரன் நேற்று ஆஸ்பத்திரிக்கு சென்று பார்வையிட்டு சுகம் விசாரித்தார்.

## பாலசந்தரின் படம் திடீர் நிறுத்தம்

சென்னை நவ. 22

சென்னையில் திரையிடப்பட்ட கே. பாலசந்தரின் 'தண்ணீர் தண்ணீர்' என்ற திரைப்படம் திடீரென நிறுத்தப்பட்டது.

அரசாங்கத்தின் வற்புறுத்தல் காரணமாக நிறுத்தப்பட்டதாகக் கூறப்படும் செய்தி தவறென்றும் வர்த்தகரீதியின் காரணமாகவே நிறுத்தப்பட்டதாக சென்னிந்திய திரைப்பட தலைவரான திரு. இராமானுசம் தெரிவித்தார்.

யாழ். மாவட்ட சபைத் தேர்தல் வழக்கு:

# சத்தியக்கூற்று இம்மாதம் 25-ல் அணைக்கப்படும்

## தமிழ்க் காங்கிரஸ் செயற்குழு முடிவு

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திசபைத் தேர்தல் ஆட்சேப வழக்கில் தமிழ்க்காங்கிரஸ் சார்பில் இம்மாதம் 25-ம் திகதி அப்பீல்நீதிமன்றத்தில் சத்தியக்கூற்று அணைப்பதென்று நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற தமிழ்க்காங்கிரஸ் செயற்குழுக் கூட்டத்தில் ஏகமனதாக முடிவுசெய்யப்பட்டது.**

தமிழ்க்காங்கிரஸ் தலைமைச் செயலகத்தில் கட்சித்தலைவர் திரு. எஸ். ஆர். கனகநாயகம் தலைமையில் நடந்த இக் கூட்டத்தில் கட்சிப் பொதுச்செயலாளர் திரு. குமார் பொன்னம்பலம் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத்தேர்தல் ஆட்சேப வழக்கு பற்றிய விபரங்களை தெரிவித்தார்.

சட்டத்தரணி இராஜராஜேஸ்வரன் தங்கராசா தேர்தலை ஆட்சேபித்து நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்குத் தொடர்பாக தமிழ்க்காங்கிரஸ் தரப்பில் சத்தியக்கூற்று அணைப்பது பற்றி ஆலோசிக்கப்பட்டு மேற்கண்ட முடிவெடுக்கப்பட்டது.

தற்போதுள்ள அரசியல் நிலைமையைப்பற்றி அறிக்கையொன்று விடுவதென்றும் முடிவு செய்யப்பட்டது. (மா)

## சபாஷ் ஹாட்லி

(உடுப்பிட்டி)

ஜி. ஸி. ஈ. உயர்தர (ஆகஸ்ட்) பரீட்சையில் விஞ்ஞான பிரிவில் நான்கு பாடங்களிலும் அதி விசேட சித்திகளைப் பெற்று யாழ். மாவட்டத்திலேயே சாதனை நிலை நாட்டியுள்ள பருத்தித்துறை ஹாட்லிக் கல்லூரி மாணவர்கள் நால்வரையும் கல்வி அமைச்சு கௌரவித்துப் பாராட்டவுள்ளது.

பிரஸ்தாப நான்கு மாணவர்களுக்கும் தலா ஆயிரம் ரூபா வீதம் அன்பளிப்பாக வழங்கப்படவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

## இன்று விஜயம்

(யாழ்ப்பாணம்)

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் கீழ் இயங்கும் நிலையங்களுக்கு அபிவிருத்திசபைத் தலைவர் திரு சு. நடராசாவும் யாழ் அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையாவும் இன்று பிற்பகல் முதல்தடவையாக விஜயம் செய்யவுள்ளனர்.

யாழ் மாவட்ட அமைச்சின் இணைப்புச் செயலாளரும் உதவி அரசாங்க அதிபரும் உப அலுவலக நிர்வாக அதிகாரியுமான திரு. எஸ். பி பாலசிங்கமும், அலுவல ஊழியர்களும் இவர்களை வரவேற்று குறைநிறைகளை எடுத்துக் கூறவுள்ளனர்.

## பட்ஜட் விவாதம்: 'ஆலால்' இன்று கன்னிப்பேச்சு

(கொழும்பு)

பட்ஜட் விவாதத்தில் கோப்பாய் எம். பி. திரு. எம். ஆலாலசுந்தரம் இன்று கலந்து கொள்வார்.

பாராளுமன்றம் இன்று காலை பத்துமணிக்குக்கூடும் போது வரவு செலவுத்திட்டம் மீது தொடர்ந்து விவாதம் நடைபெறும். இன்றைய விவாதத்தில் கோப்பாய் எம், பி திரு எம் ஆலால சுந்தரமும் கலந்து கொள்வார்.

திரு. எம். ஆலாலசுந்தரம் கோப்பாய் எம். பி யாக நியமிக்கப்பட்டு பதவியேற்றதன் பின்னர் பாராளுமன்றத்தில் இன்றுதான் முதற்தடவையாக உரையாற்றுகின்றார் (ப)

## நாளை வாக்கெடுப்பு

(கொழும்பு)

பட்ஜட் மீதான விவாதம், நாளையுடன் முடிவடைகிறது. இரண்டாவது வாசிப்பு மீதான வாக்கெடுப்பு நாளை இரவு எட்டுமணிக்கு நடைபெறும்.

பிரதமரின் உரையைத் தொடர்ந்து எதிர்க்கட்சித் தலைவர் திரு. அமிர்தலிங்கம் விவாதத்தை முடித்துவைப்பார் இதனைத் தொடர்ந்து வாக்கெடுப்பு நடைபெறும் ம

## "மாவட்ட அபிவிருத்தி சபைகள் ஆமைவேகத்தில் செயல்படுகின்றன"

### 'சிவா' கண்டனம்

(கோண்டாவில்)

"அபிவிருத்தி சபைகள் மூலமாவது எமது பகுதிகளை முன்னேற்றலாம் என்று கருதியிருந்தோம். ஆனால் இன்று அபிவிருத்திசபைகளின் போக்கைப் பார்த்தால் அது ஆமை வேகத்திலும் பார்க்க குறைந்தே செயற்படுகின்றன. நாங்களும் இக்குறைபாடுகள் பற்றி அரசுக்கும் பலமுறை எடுத்துக்கூறியுள்ளோம் கூறுகின்றோம். ஆனால் அவை யாவும் செவிடன் காதில் ஊதிய சங்கைப் போன்றதான் இருக்கின்றது" என்று தமிழர் விடுதலைக் கூட்டணித் தலைவரும் நல்லூர் எம். பி யுமான திரு மு. சிவசிதம்பரம் குறிப்பிட்டார்.

யாழ் மாவட்ட அபிவிருத்தி சபையின் நல்லூர் உபபணியகத்தினால் திருநெல்வேலிச் சந்தைக்கு அருகில் சுமார் மூன்றரை லட்சம் ரூபா செலவில் அமைக்கப்பட்ட மின் விநியோகத் திட்டத்தை திரு. மு. சிவசிதம்பரம் ஆரம்பித்து வைத்தார். இவ்விழா உபபணியக நிர்வாக மேற்பார்வையாளரும் மாவட்ட அமைச்சின் இணைப்பதிகாரியுமான திரு. எஸ். பி. பாலசிங்கம் தலைமையில் நடைபெற்றது.

நல்லூர் எம். பி. திரு. மு. சிவசிதம்பரம் மேலும் கூறியதாவது: எமது பகுதியிலுள்ள மக்களில் பலர் கைத்தொழிலாளர்களாகவும், விவசாயிகளாகவுமே காணப்படுகின்றனர். அவர்கள் மண்ணெண்ணை மூலம் தமது தேவையைப் பூர்த்தி செய்ய முடியாத நிலையில் காணப்படுகின்றார்கள். இந்நிலையில் இம் மின் நிலையம் மூலம் விவசாயிகள், கைத்தொழிலாளர்கள் கூடியளவு பயன் அடையவேண்டும். யாழ்ப்பாண பல்கலைக்கழகத் திற்கு என்று தனியான மின் விநியோக நிலையம் ஒன்றை அமைக்க சிந்தித்து வருகிறோம்.

(6-ம் பக்கம் பார்க்க)

## காயங்களுடன் ஒருவர் ஆஸ்பத்திரியில் மரணம்

(யாழ்ப்பாணம்)

காயங்களுடன்கிடந்த ஒருவர் யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு அங்கு மரணமாகியுள்ளார்.

வேலணை கிழக்கைச் சேர்ந்த நமசிவாயம் செல்வரத்தினம் (27 வயது) என்பவரே மரணமானவராவார்.

விசாரணைகளை மேற்கொண்ட பதில் நீதிபதி எஸ். எஸ். பிரான்சிஸ் பிரேத பரிசோதனைக்கு உத்தரவிட்டு தீர்ப்பு வழங்குவதை ஒத்திவைத்தார்.

இறந்தவர் அராலி வீதியிலுள்ள இவரது வீட்டுக்கருகிலேயே நேற்றுக்காலை காயங்களுடன் காணப்பட்டாராம். பின்பு யாழ் ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதும் மரணமானதாகக் கூறப்படுகிறது. (பன்: நீ: மா)

## "குடும்பப் பிரச்னைகளால் சிறுவர் மனநிலை பாதிக்கப்படுகின்றது"

### சிறுவர் தினவிழாவில் அபிவிருத்தி சபைத்தலைவர்

(யாழ்ப்பாணம்)

"பாடசாலையை விட்டு மாணவர்கள் வெளியேற முன்பே விரக்தி மனப்பான்மை உருவாகிவிடுகிறது" என்று சர்வதேச சிறுவர் ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் யாழ் மாவட்ட அபிவிருத்தி சபைத் தலைவர் திரு சு நடராசா குறிப்பிட்டார்.

இச் சிறுவர்தின விழா யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் வடபகுதி சிறுவர்நலத் தாபன ஆணையாளர் திருமதி ப. திலகநாயகம் தலைமையில் நடைபெற்றது.

திரு சு நடராசா தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது:- "சிறுவர்கள் பராயமடைந்த பின்பு சமூகத்துக்கு உதவுபவர்களாக இருக்கும் பக்குவமுறை அமைய வேண்டும்.

"நாங்கள் வாழும் சூழலைப் பொறுத்தே சிறுவர்களின் மனநிலை அமைகிறது. குடும்பங்களில் ஏற்படும் பிரச்னைகள் காரணமாகவும் சிறுவர்களின் மனநிலை பாதிக்கப்படுகிறது."

### அநாதைப்பெண்களுக்கு விடுதிதேவை

யாழ். மாவட்ட நீதிபதி திரு கே. பாலகிட்ணர் உரையாற்றுகையில் யாழ். மாவட்டத்தில் 18 வயது அநாதைப் பெண்களுக்குத் தகுந்த விடுதி

(6-ம் பக்கம் பார்க்க)

### மணிவாக்கு

சொந்த நாட்டிற் பிறர்க்கடிமை செய்தே துஞ்சிடோம் இனி அஞ்சிடோம்.

— பாரதியார்

# நமது நோக்கு

## பேஷ் பாலா! பேஷ்

ஆங்கிலேயரின் அற்புதமான கிரிக்கெட் விளையாட்டை ஒரு இந்தியர் எவ்வளவு திறமையாக ஆடினாரென்ற கதையை நாம் அண்மையில் இப்பகுதியில் குறிப்பிட்டிருந்தோம்.

நவநகர் என்றொரு இந்திய சிற்றூர் அரசன் - றஞ்சித்சிங், ஒரு பெரிய விளையாட்டுக்குச் சக்கரவர்த்தியாகத் திகழ்கிறாரென்றதே அந்தவர்ணனை!

இன்று நாம் இங்கு குறிப்பிடுவது ஒரு யாழ்ப்பாணத் தமிழர் பற்றியே! ஒரு யாழ்ப்பாணத்துத்தமிழர், ஒருசிங்களத் தலைவர் நிகழ்த்த வேண்டிய சாதனையை எவ்வளவு சாமர்த்தியமாக நிலைநாட்டியது இக்காலத்தின் அற்புதங்களிலொன்றாகக் கொள்ள வேண்டும்.

நாம் குறிப்பிடுவது அண்மையில் தூரநியூயோர்க்கில் (New York) நடைபெற்ற 'சிங்கள- தமிழ் கருத்தரங்கு பற்றியே! அமெரிக்காவின் அப்பெரிய நகரிலே ஆசிய சங்கத்தின் அழைப்பில் நடந்த இக் கருத்தரங்குக்கு தலைமை வகித்தவர் இங்கு முன்னர் அமெரிக்க தூதுவராக இருந்த திரு. ஹாவர்ட் றிகின்ஸ்.

இலங்கை அரசியல் விவகாரங்களில் - சிறப்பாக தமிழர் பிரச்னையில் போதிய அறிவுடையவரென்பதை நாம் எங்கள் பத்திரிகாலயத்தில் அவர் நடத்திய பேச்சுவார்த்தைகளில் நேரடியாகக் காணமுடிந்தது.

இக் கருத்தரங்கில் இலங்கை அரசின் தரப்பில் பிரதம பேச்சாளராகக் கலந்து கொண்டவர் யாழ்ப்பாணத் தமிழராகிய தூதுவர்] திரு என். பாலசுப்பிரமணியம்.

சிங்கள- தமிழ் இனப்பாகுபாடோ அல்லது இனப்பிணக்கோ நாட்டில் காணமுடியாதென்று அவர் திட்டவட்டமாகக் கூறியிருப்பதாக ஒரு ஆங்கில தினசரி செய்தியை வெளியிட்டிருக்கிறது.

இவ்வடிப்படையில் வேறுபாடு கிடையாதென்றவர் இன்றைய நிலையில் பிணக்கு இருப்பது உண்மை பெற்று ஒப்புக்கொண்டிருக்கிறார் - தமிழர் தம் பழைய சாதனையிற் பிடிவாதமாக இருக்கிறார்களென்பதே.

திரு பாலசுப்பிரமணியம் வெளிநாட்டுத் தூதுவர் சேவையில் திறமையாக உழைத்து உயர்ந்தவர். அவருடைய வாதத்தில் புள்ளிவிபரங்கள் பிழை போகா; அவற்றைக் கையாளும் திறமையில் அவர் ஒரு மன்னனுக்கு நிகரானவர். எடுத்த வழக்குக்கு அவை நற்சேவை செய்யும்.

தமிழ் மக்கள் இந்த நாட்டின் ஜனத்தொகையில் 12 வீதமாக இருந்த போதும் தொழிலில், அரசாங்க உத்தியோகத்தில் 25 வீதம் தொடக்கம் 60 அல்லது சில துறைகளில் 90 வீதம் காணப்படுகின்றார் என்றும் வெளிநாட்டுத் தூதர் சேவையில் கடமை புரிவோர் பெரும்பான்மையர் தமிழர் என்றும் கூறியிருக்கிறார்.

இந்தவாதம் அரசாங்க இராகம். இதற்குமுன் பிரதமர் பிரேமதாசாவும் பிரதம நீதியரசர் திரு. நெவில் சமரக்கோனும் இந்த விபரங்களையே வெளிநாட்டு விஜயங்களில் முன் வைத்தனர்! உயர்நீதிமன்ற நீதியரசர்கள், சட்டமா அதிபர் போன்ற பெரும்பதவிகளைப் பல தமிழர் வகிக்கின்றார்கள் என்ற [illegible] டைக் கிளிப்பிள்ளை போல் அரசாங்க உத்தியோகத்தர்கள், அரசியல் தலைவர்கள், தூதுவர்கள் உபயோகிப்பது நாம் அறிந்த விடயம்.

அரசாங்க சேவையில் பெரும்பான்மையினருக்கும் திரு. பாலசுப்பிரமணியத்தில் கிடைத்த நன்கொடை ஒரு அபூர்வமானது! தம்முடைய வாழ்க்கை வரலாற்றையே ஒரு உதாரணமாகக்கொண்டு தமிழ் மக்களுடைய உரிமைகள் எல்லாம் அரசு வழங்கிவிட்டது. ஆனால் அவர்கள் "இது போதாது இன்னும் வேண்டும்" என்று போராடுகிறார்கள் என்று கூறியிருப்பதாகச் செய்தி. எனவே 'இன்னும் வேண்டும். இன்னும் வேண்டும்' என்று கேட்ட 'ஒலிவர் டுவிஸ்ட்' அமெரிக்காவுக்கு இன்றுதான் சென்றிருக்கிறார்.

ஒலிவர் டுவிஸ்ட் (Oliver Twist) என்ற நாவலை எழுதிய பிரபல ஆங்கில நாவல் ஆசிரியர் டிக்கன்ஸ் அமெரிக்கா சென்றது சில நூற்றாண்டுகளுக்குமுன்னர்! ஆனால் அவருடைய ஒலிவர் டுவிஸ்ட்' இன்று தான் அங்கு சென்றிருப்பது ஒரு அதிசயமான செய்தி; அதுவும் யாழ்ப்பாணத் தமிழர் ஒருவரின் சாதனையென்பதில் பெருமை கொள்வது நியாயமே!

தம்முடைய பல்கலைக்கழக வாழ்விலோ அல்லது வெளிநாட்டுச் சேவையிலோ தான் ஒரு தமிழர் என்பது எவ்வித பாரபட்சத்தையும் ஏற்படுத்தவில்லையென்றும். அதே சமயம் சிங்கள சகாக்கள் தமது உயர்ச்சிக்கு உதவியாயிருந்தாரென்றும் திரு பாலசுப்பிரமணியம் கூறியது உண்மை என நாம் ஒப்புக்கொள்கிறோம். ஆனால் அது அந்தக்காலம்!

அவருடைய பழைய கல்லூரியாகிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரியின் இறப்பட்ட பல்கலைக்கழக முடிவுகளே தரப்படுத்தலுக்கு காலென்றும், அதன் விளைவாக திறமையான மாணவர்கள் விரக்தி மேல் விரக்தியடைந்து, குழப்ப நிலைக்குத் தள்ளப்படடனர் என்றும், திறமை அடிப்படையில் இன்றைய ஆட்சி இயங்கவில்லையென்றும் அவருக்குத் தெரிந்திருக்காதா?

இவரைப்போலஒருசிங்கள திறமைசாலி தமிழருக்கு வாதாடக் கிடைக்கவில்லையே! அவர் இல்லையெனினும் ஒருவரை எழுதமுடியுமானால் தலைவர் ஹரல்ட் றிகின்ஸ் கவலையடைந்திருக்கமாட்டார்.

# அழகுமிகு கட்டிடங்களிலும்
## பெறுமதிமிக்க நூல்களே தேவை

யாழ்ப்பாணப் பொதுசன நூலகத்தைப் புனருத்தாரணம் செய்வதில் சிலருக்கு விநோதமான எண்ணங்கள் சில உதித்துள்ளதாகக் கேள்விப்படுகின்றோம் அதாவது ஜூன் மாதம் முதலாம் திகதி அழிவுற்ற நூல் நிலையத்தைத் திருத்தியமைக்காது அதனை என்றுமே அந்தச் சம்பவத்தின் ஞாபகார்த்தமாக அதே நிலையில் இருக்கவிட்டு முற்றிலும் புதியதான வேறொரு கட்டிடத்தை அமைக்கத் திட்டமிடுகின்றனர். அத்தகைய திட்டம் புத்திசாலித்தனமானது அல்ல என்பது பின்வரும் காரணங்களாற் பெறப்படும்

ஞாபகச் சின்னம் பிற்சந்ததியாரினால் போற்றி நினைவுகூர வேண்டிய சிறப்பு வாய்ந்த பெருமக்களுக்கும் சம்பவங்களுக்குமே எழுப்பப்படுகிறது. துவேஷமும் குரோதமும் உந்தித்தள்ள காடையர் கூட்டமொன்று பித்துப்பிடித்து உழன்றதனை நினைவுகூர ஞாபகச்சின்னம் அமைப்பது அத்தகைய ஸ்தூபிகளின் புனித நோக்கத்தையே பாழடித்துவிடும்:

இரண்டாவதாக நூல்நிலையக் கட்டிடத்தை அதே நிலையில் வைத்திருப்பது, பாதிக்கப்பட்டவர்களினால் எதிர்த்தாக்குதல் நடத்தமுடியவில்லை என்று விளம்பரப்படுத்துவதாக அமையும். ரோட்டர் டாம் என்ற மாநகரத்தை ஹிட்லர் 1940ல் குண்டுவீசியழித்தான். ஒல்லாந்து மக்கள் அதனைச் சீரழிந்த நிலையில் விட்டுவிடாது அழகும் கம்பீரமும் வாய்ந்த இன்னொரு நகரத்தை அதே இடத்தில் அமைத்தனர். 1940-ம், 1941-ம் வருடங்களில் கோவரிங் விமானப்படையினர் இலண்டன் மாநகரத்தின் பெரும் பகுதியை நாசமாக்கினர். ஆனால் அன்று இலண்டன் மாநகரின் சாதாரண கடைக்காரர் கூட "வியாபாரம் வழமைபோல் நடைபெறும்" என்று அறிவிப்புப்பலகைகளைத் தொங்கவிட்டனர். யுத்தம் முடிந்து சில மாதங்களின்

### நலன்விரும்பி

பின்னர் இலண்டன் மாநகர் 500 வருடங்களுக்கு முன் அது இருந்ததுபோல தோற்றியது. மீண்டும் பூரணப் பொலிவு கொண்டு மலர்ந்தது. அழிவை ஏற்படுத்தியவர்கள் அதனையிட்டு இறுமாந்திருக்காத வண்ணம் பிரான்சும் இவ்வாறு உடனடியாக புனருத்தாரண வேலையில் ஈடுபட்டது சீரழிந்த கட்டடத்தை அப்படியே விடுவது எமது கையாலாகாத் தன்மையை வெளிக்காட்டுவதாக அமையும்.

மூன்றாவதாக புதியதொரு கட்டிடம் அமைப்பது பதியதாக்குதல்களுக்கு இடமளிக்கும். மேலும் அத்தகைய எண்ணம் நூலகத்தின் நோக்கிற்கே முரணானதாகும். நூல் நிலையத்தின் நோக்கம் நூல்களைப் பேணி வைத்திருப்பதாகும். நூலகத்தின் அமைப்பு அழகு, பருமன் என்பவை முக்கியமானதல்ல. பிரிட்டிஷ் நூதனசாலை நிலப்பரப்புக்கு மேல் ஒரு சிறந்த கட்டிடத்தைக் கொண்டு விளங்குவதெனினும் அதனுடைய உயர்ந்த நூல்களெல்லாம் நிலப்பரப்புக்கீழ் இருக்கும் அறைகளிலேயே இருக்கின்றன. உலகில் உருவாகும் சகல நூல்களுடன் பொதுநலவாய அமைப்பு நாடுகளில் உருவாகும் புத்தகங்களில் ஒவ்வொன்றின் பிரதிகளும் அங்கு பேணிப்பாதுகாக்கப்படுகின்றன. ஆக்ஸ்போர்ட்டிலிருக்கும் பொட்டிலியன் நூலகமும் இத்தகையதே. கட்டிடம் மோலோங்கி நின்றாலும், அதன் நூல்களில் 90சதவீதமானவை சில மைல்கள் வியாபித்து நிற்கும் நிலஅறைகளிலேயே வைக்கப்பட்டுள்ளன.

எனவே நாம் வீண்பெருமையுடன் உஞ்சந்தீர்க்கும் மனப்பான்மையுடனும், கோடிக்கணக்கான பணத்தைக் கட்டிடம் அமைப்பதிற் செலவிடாமல் பெருந்தொகையான நூல்களைச் சேகரிப்பதிலேயே கவனத்தைச் செலுத்தவேண்டும். எனவே இலங்கையிலும் பிற நாடுகளிலும் நூல் நிலையத்திற்குப் பணம் அனுப்புபவர்களிடம் பணம் எதற்கு என்று கேட்கவேண்டும். புதிய கட்டிடத்தை அமைப்பதற்கெனின் மறுத்துவிடுங்கள். நூல்கள் வாங்குவதற்கெனின் வாரி வழங்குங்கள்.

# புலவர்மணியின் தமிழ்ப்புலமைக்குகாரணம்
## யாழ்ப்பாணத்து நல்லறிஞரின் தொடர்புதான்"

(கொழும்பு)

"யாழ்ப்பாணத்து நல்ல அறிஞர்களின் தொடர்புதான் எனது தமிழ்ப்புலமைக்கு காரணமாக அமைந்தது என்று தந்தையார் கூறுவார். நாவலர் பாடசாலையிலே கன்னாகம் குமாரசுவாமிப்புலவரைத் தனது ஆசிரியராகவும் பண்டிதமணி சி. கணபதிப்பிள்ளை அவர்களே தனது சகபாடியாகவும் பெற்றதை அவர் பெருமையாகக் கூறுவார்."

இவ்வாறு புலவர்மணி ஏ பெரியதம்பிப்பிள்ளையின் புதல்வரான கொழும்பு ஷாஹிரா கல்லூரி ஆசிரியர் திரு. விஜயரத்தினம் புலவர் மணி பெரியதம்பிப்பிள்ளை நினைவுவிழாவில் பேசுகையில் குறிப்பிட்டார்.

(6-ம் பக்கம் பார்க்க)

# ரயில் பிரயாணம்

ரயில் பிரயாணங்கள் தற்போது அவ்வளவு பாதுகாப்பாக இல்லை என்பது தற்போது அடிக்கடி நினைவூட்டப்பட்டே வருகிறது. குறிப்பாக இரவு மெயில் வண்டிகளில் அவ்வப்போது ரயில் வழிப்பறிகள் அதிகரித்தே வருகிறது.

கொழும்பு கோட்டைப்புகையிரதத்துக்கும் பொல்காவலை புகையிரத நிலையத்துக்குமிடையேயே இவ்வித வழிப்பறிகள் அதிகம் நடைபெறுகின்றன.

இவ்வித வழிப்பறிக்கொள்ளையர்களின் அட்டகாசம் ஓய்ந்தபாடாக இல்லை.

இக் கொள்ளைகளில் இளநீர், வடை, சிகரட்போன்றவற்றை ரயிலிலுள் விற்பனை செய்யும் இளைஞர்களும் ஈடுபட்டுவருவதாகப் பொலிசார் தற்போது சந்தேகித்துள்ளனர். இவ்வித கொள்ளையர்களைப் பிடிப்பதற்கு பொலிஸார் தற்போது தீவிரநடவடிக்கை எடுத்து வருகின்றனர்.

இரவில் ரயிலில் பிரயாணம் செய்யும் பிரயாணிகள் குறிப்பாக பெண்கள் இதனால் அதிகம் பாதிக்கப்பட்டு வருவதாகவும். இவர்கள் தமது பாதுகாப்புக்கருதி அதிக நகைகளை அணிந்து செல்லாதிருப்பது நல்லதாக இருக்குமென்றும் பொலிஸ் அதிகாரி ஒருவர் யோசனை தெரிவித்துள்ளார்

### மக்கள் கருத்து

வியாங்கொடை ருக்கமை ஆகிய புகையிரத நிலையங்களில் சென்ற இருவாரங்களிலும் யாழ்ப்பாணத்திலிருந்து சென்ற பிரயாணிகளிடம் பல பெறுமதியான பொருட்கள் சூறையாடப்பட்டுள்ளன

பிரயாணிகளின் கழுத்தடியில் கத்தியை வைத்து மிரட்டி இவ்வித வழிப்பறிகளை இக் கொள்ளையர்கள் நடத்தி வருகின்றனர். இவ்வித நிலைக்கு வடபகுதியைச் சேர்ந்த பிரபல விரிவுரையாளர் ஒருவரும் சென்ற வெள்ளிக்கிழமை விடியற்காலை உள்ளாக்கப்பட்டாராம்.

தற்போது பொலிஸார் தீவிர கண்காணிப்பில் ஈடுபட்டுக் கொண்டிருந்தபோதும் அதே நேரத்தில் மற்றுமொரு விஷயம். ரயில் பிரயாணத்தின் போது பாதிக்கப்படும் பிரயாணிகள் பொலிசாரிடம் முறைப்பாடு செய்வதில்லை என்று பொதுவாகக் கூறப்படுகிறது. குறிப்பிட்ட ரயில் நிலையங்களில் புகார் செய்யத் தவறுவர் அதற்கடுத்த ரயில் நிலையங்களிலாவது முறைப்பாடு செய்வது நல்லது. இதுவும் கஷ்டமானால் பிரயாணி வந்துசேரும் பகுதியிலுள்ள பொலிஸ் நிலையத்திலாவது முறைப்பாடு செய்வது அவர்களுக்கு மட்டுமல்ல எதிர்கால பாதுகாப்புக்கும் உகந்தது:

— க. கணேசலிங்கம். யாழ்ப்பாணம்.

### இன்று ஜனனவிழா



(யாழ்ப்பாணம்)

பகவான் ஸ்ரீ சத்தியசாயி பாபாவின் பிறந்ததினவிழா இன்று திங்கட்கிழமை கொண்டாடப்படுகிறது.

யாழ்ப்பாணம் பகவான் ஸ்ரீ சத்தியசாயி சேவாசமித்தியினர் திருநெல்வேலி பொன். இராமநாதன் வீதியிலுள்ள சமித்திமண்டபத்தில் நடத்தும் விழாவில் இலக்சார்ச்சனை பஜனை, தியானம், மங்கள ஆரத்தி, சொற்பொழிவு பாலர்நிகழ்ச்சி முதலியன இடம்பெறும்.

# பெண்ணிடம் சங்கிலி அறுத்த வாலிபர்கள் பொலிஸில்!

(யாழ்ப்பாணம்)

வீதியில் பெண்ணிடம் தங்கச்சங்கிலியை அறுத்துக்கொண்டு தப்பியோட முயன்ற இரு வாலிபர்கள் வகையாக மாட்டிக்கொண்டனர். இச்சம்பவம் நேற்று முன்தினம் பகல் நாவலர் வீதியில் கைலாய பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் நடைபெற்றது.

நாகலிங்கம் அன்னம்மா என்ற வயோதிபப் பெண் வீட்டுக்கு மிக அண்மையில் உள்ள கடைக்குச் சென்று வீடு திரும்பும்போது சைக்கிளில் வந்த இரு வாலிபர்கள் அப்பெண்ணின் கழுத்தில் இருந்த ஐந்து பவுண் சங்கிலியை அறுத்துக்கொண்டு சைக்கிளில் விரைவாக ஓடினார்கள். [illegible]

வயோதிபப்பெண் 'கள்ளன், கள்ளன்' என்று பதைத்துக் கத்தியதும் மேற்படி வீதியால் சென்ற பொதுமக்கள் இரு வாலிபர்களையும் துரத்திச் சென்று நல்லூர் கைலாசபிள்ளையார் கோவிலடியில் வைத்து மடக்கிப்பிடித்து அவர்களிடமிருந்து சங்கிலியை மீட்டதுடன் வாலிபர்களையும் யாழ். பொலிஸில் ஒப்படைத்தனர். பொலிஸ் விசாரணையின்போது ஒருவர் மண்டைதீவைச் சேர்ந்தவர் என்றும் மற்றவர் சுதுமலையைச் சேர்ந்தவர் என்றும் தெரிய வந்தது.

விசாரணை தொடர்ந்து நடைபெற்று வருகிறது.

(மண். நி.)

## புலவர்மணி

(3ம் பக்கத் தொடர்ச்சி)

கொழும்பு தமிழ்ச் சங்கம் ஒழுங்கு செய்திருந்த இந்த விழா சங்க மண்டபத்தில் நடைபெற்றது. தமிழ்ச் சங்கத் தலைவர் திரு. பொ. சங்கரப்பிள்ளை தலைமை வகித்தார். திரு. விஜயரத்தினம் மேலும் கூறியதாவது:

"சாவகச்சேரியில் ஆசிரியராக பணிபுரிந்த வேளையிலும் அவர் பலரின் சகவாசத்தைப் பெற்றிருந்தார். இந்தியாவிலே வேதசாத்திர கலாசாலையிலே ஒரு மாணவனாக சேர்ந்த வேளை தான் சுவாமி விபுலானந்தரை ஆசிரியராகப் பெற்று பின்னர் அவரின் அழைப்பிலேயே மட்டக்களப்பு இராமகிருஷ்ண மிஷன் — சுவாமி விபுலாநந்தருடன் சைவம் வளர்க்கும் பணியில் ஈடுபட்டார். இந்திய வேதசாத்திர கலாசாலை அவர் பாதையையே ஒரு கத்தோலிக்க துறவியாக திருப்பிவிட்டிருக்கக் கூடியது. ஆனால் விபுலானந்தர் அவர் பாதைமாற விடவில்லை. பொருளுக்காக வன்றி அறிவுக்காக தமிழைக் கற்றார் எனது தந்தையார். அவரின் படைப்புகள் பல இன்னமும் நூலுருப் பெறுமல் இருக்கின்றன. தமிழ் வழிக்குழு கழகங்கள் இத்தகையோரின் படைப்புகளை அச்சுவாகன மேற்றுவதும் அவற்றின் தலையாய கடமையாகும்" என்றார்.

கொழும்பு பல்கலைக்கழக தமிழ்த்துறைத் விரிவுரையாளர் கலாநிதி இ. பாலசுந்தரம் பேசுகையில் கம்பர், வள்ளுவர், பாரதிபோல் புலவர்மணியும் இலக்கியப் பாரம்பரியத்திலே ஒருவர் என்றார்.

திரு. கி. லக்ஷ்மண ஐயர் புலவர் மணியின் உருவப்படத்தை திரைநீக்கம் செய்து வைத்தார்.

(ம)

## 'சனத்தொகையும் அபிவிருத்தியும்' இன்று கருத்தரங்கு

(யாழ்ப்பாணம்)

"சனத்தொகையும் அபிவிருத்தியும்" பற்றிய கருத்தரங்கு இன்று திங்கட்கிழமை காலை யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா தலைமையில் யாழ். செயலகத்தில் நடைபெறவிருக்கிறது.

யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவர் திரு. சு. நடராசா இக்கருத்தரங்கை ஆரம்பித்து வைப்பார்.

கொழும்பு தலைமை திணைக்களத்தைச் சேர்ந்த பிரதிநிதிகள் உட்பட சுமார் 45 உயர்தர அதிகாரிகள் கலந்துகொள்வர்.

யாழ். மாவட்ட திட்டமிடல் உதவிப்பணிப்பாளர் திரு. நா. புவனேந்திரன் இக்கருத்தரங்குக்கான ஒழுங்குகளை மேற்கொண்டுள்ளார்.

மா

## தணிக்கை

பொருசன ... காப்புச் சட்டத்தின் கீழ் அரசாங்கத்தினுல் கொண்டுவரப்பட்ட பத்திரிகைத் தணிக்கை அமுலில் உள்ளது.


# ஹோம் பினன்ஸ்

## லிமிட்.

உங்கள் வசதிக்காக சிறந்த பொருட்களை நாம் விற்பனை செய்கிறோம்.

- Pedestal - மின்விசிறிகள் 16"
- Phoenix (CHINA) - சைக்கிள்கள்
- Home Mate (JAPAN) - மணிக்கு 1000 கலன் நீர் இறைக்கும் மின்சார இயந்திரம்

மாதாமாத கட்டுப்பண முறையிலும் கொள்வனவு செய்யலாம்.

விபரங்கட்கு:

**ஹோம் பினன்ஸ் லிமிட்.**

82, கன்னதிட்டி வீதி,
யாழ்ப்பாணம்.

போன்: 8310


## குடும்ப...

(1ம் பக்கத்தொடர்ச்சி)

கள் இல்லாதது பெரும் குறையாக உள்ளது என்றும் மாவட்ட அபிவிருத்தி சபைத்தலைவரும் அரசாங்க அதிபரும் மற்றும் அதிகாரிகளும் ஒருங்கு சேர்ந்து அநாதைப் பெண்களுக்கான ஒரு வீடு அவசியம் அமைக்க வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

சிறுவர்கள் சுகாதாரமாகவும், சுதந்திரமாகவும் வாழ வழிசமைக்கவேண்டும் என்றும் அவர் கேட்டுக்கொண்டார்.

யாழ். நீதிமன்ற நீதவான் திரு. ரி. ஜோகநாதன் பேசுகையில், இன்றைய சிறுவர்கள் நாளைய தலைவர்கள் அவர்களை நல்ல முறையில் வளர்த்தெடுப்பது எமது கடமை. ஒரு நாடு முன்னேறவேண்டுமானால் சமாதானம் நிலவ வேண்டும். சமாதானம் நிலவ சிறுவர்களின் மனுேநிலை வளர வேண்டும். மனுேநிலை வளர சிறுவர்களின் தேகசுகம் இருக்க வேண்டும்" என்றார்.

யாழ். அரசாங்க அதிபர் திரு. தேவநேசன் நேசையா பேசுகையில் வளமுற்ற சிறுவர்களை நாங்கள் ஒருபோதும் புறக்கணிக்கக்கூடாதென்றும், அவர்களுக்கு வேண்டிய உதவிகளைச்செய்ய வேண்டுமென்றும் கேட்டுக்கொண்டார்.

சிறுவர்களின் குறைபாடுகளுக்கும் பெற்றோர்களே தான் பொறுப்பேற்கவேண்டும் என்றும் அவர் சொன்னார்.

சிறுவர்களின் கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன. மா

## மூதாட்டிக்கு நேர்ந்த கதி!

(யாழ்ப்பாணம்)

தீவைமூட்டி குளிர்காய்ந்த மூதாட்டி ஒருவர் அத்தீயிலேயே வெந்து மரணமானார்.

கோண்டாவில் கிழக்கு தம்பன் தெய்வானை (65 வயது) என்பவரே நெருப்பை மூட்டிவிட்டு குளிர்காய்ந்து கொண்டிருந்தபோது இவர் உடுத்திருந்த சேலையில் திடீரெனத் தீ பிடித்துக்கொண்டதாம். காயங்களுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டு பின்னர் மரணமானார்.

மரணவிசாரணை நடத்திய அதிகாரி எஸ். எம். பிரான்சிஸ் விபத்து மரணமென தீர்ப்பளித்தார்.

(மா)

## மாவட்ட...

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

றோம். அத்திட்டம் செயல்பட்டால் இப்பகுதி மக்களுக்கு வேண்டியளவு மின்சாரம் கிடைக்கக்கூடியதாகவிருக்கும்.

"அபிவிருத்தி சபைகள் கடந்தகாலம் அரசு தருகின்ற பணத்துடன் நாமும் பணத்தைச் சேர்த்து எமது பகுதிகளுக்கு வேண்டிய நடவடிக்கைகள் திட்டங்களைமேற்கொள்ள லாம் என்று எண்ணினேம். ஆனால் அதன் வேகம் மிகவும் குறைவாகவே காணப்படுகின்றது. ஆரம்பத்தில் யாழ். மாவட்ட அபிவிருத்தி சபைக்கென்று ஒரு தனிக் கட்டிடம் அமைக்க யோசித்தோம். ஆனால் முன்னைய கிராம பட்டின சபைகள் உப பணிமனைகளாகத் தொழிற்படுவதால் மாவட்ட அபிவிருத்தி சபைக்கென்று ஒரு தனிக்கட்டிடம் அமைக்க முயற்சியைக் கைவிட்டுள்ளோம். இன்று அபிவிருத்தி சபை கச்சேரியில் இருந்தாலும் கூட மக்கள் தமது தேவைகளை உபபணிமனைகள் மூலமே பூர்த்தி செய்து வருகிறார்கள்", என்றார்.

நிர்வாக மேற்பார்வையாளர் திரு. எஸ். பி. பாலசிங்கம், ந. அருணுசலம், கிராமசேவையாளர் செல்வரெட்ணம், சட்டத்தரணி பொன்னையா, சிவசிதம்பரம் யோகேந்திரநாதன் ஆகியோரும் உரையாற்றினர்.

## இப்படியும் நடக்கிறது

கடந்த ஆகஸ்ட் மாதம் நடைபெற்ற ஜி. சி. ஈ. (உயர்தரம்) பரீட்சையின் பெறுபேறுகள் திருப்திகரமாக இல்லை என்பது பொதுவான குற்றச்சாட்டு.

இதற்கு "முத்தாய்ப்பு" வைப்பதுபோல காதில் ஒரு புதிய தகவல் விழுந்தது.

குறிப்பிட்ட ஒரு பாடங்களின் விடைத்தாள்களைத் திருத்திய சிலர் அந்தப் பாடங்களின் "மணம், குணம், காரம்" பற்றி அறியாதவர்களாம். அதாவது, இப்பாடங்களைப் படிப்பிக்கவும் இல்லையாம் படிக்கவும் இல்லையாம்! இப்பாடங்களைத் திருத்துவோரின் குழுவுக்குப் பொறுப்பாக இருந்த சிரேஷ்ட புகார் இது!

— ஊடுருவி

## பரிதாபமரணம்

(யாழ்ப்பாணம்)

எரிந்து கொண்டிருந்த அரிக்கன் லாம்பிலே சுருட்டு மூட்டியவர் அந்த லாம்புக்கே பலியானார்.

நீர்வேலி தெற்கைச் சேர்ந்த பொன்னையா சின்னராசா (வயது 25) என்பவருக்கு இயற்கையாகவே வலிப்பு வருவதுண்டு. சம்பவதினம் லாம்பில் சுருட்டுப் பற்றவைத்துக் கொண்டிருந்த பொழுது வலியினால் லாம்பின் மீது விழுந்து தீக்காயங்களுக்குள்ளாகி யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப்பட்டதாக விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

மரண விசாரணை அதிகாரி திரு எஸ். எம். பிரான்சிஸ் விபத்துமரணம் எனத்தீர்ப்பளித்துள்ளார்.

இறந்தவர் கால் முடமானவர் என்றும் வேலை எதுவும் செய்ய முடியாமல் இருந்தவர் என்றும் விசாரணையில் தெரிவிக்கப்பட்டது.

(மா)

## வடபகுதியில் சுற்றுலா மேற்கொள்வர்

(பச்சிலைப்பள்ளி)

அகில உலக இந்து மகாநாட்டுக்கு வரும் வெளிநாட்டுப் பிரதிநிதிகளுக்கு வடபகுதியிலுள்ள இந்து ஆலயங்களை சுற்றிக் காண்பிப்பதற்காக வடபகுதிக்கு அழைத்து வரப்படுவார்கள்.

இதற்கான ஏற்பாட்டினை பிரதேச அபிவிருத்தி அமைச்சு மேற்கொண்டுள்ளது.

## பாடசாலைகளுக்கு சைக்கிள்கள்

பண்டத்தரிப்பு

வட்டுக்கோட்டை கல்வி வட்டாரத்திலுள்ள மூன்று பாடசாலைகளுக்கு 'யூனிசெவ்' ஸ்தாபனத்தின் சைக்கிள் வண்டிகள் வழங்கப்பட்டுள்ளன. சங்கானை அமெரிக்க மிஷன் ஸ்தான பாடசாலை வட்டுக்கோட்டை மேற்கு அமெரிக்கமிஷன் பாடசாலை காரைநகர் இலகடி சைவத்தமிழ் வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளுக்கே இந்த சைக்கிள்கள் வழங்கப்பட்டன.

## தலைவர் பயிற்றுநரானர்



(யாழ்ப்பாணம்)

யாழ். இந்துக் கல்லூரி சாரணர் குழுவின் ஆலோசகரான திரு. நா. நல்லையா உலக சாரண சம்மேளனத்தினுல் தலைவர் பயிற்றுநராக நியமிக்கப்பட்டுள்ளார்.

சாரணர் தேசிய தலைமைச் செயலகத்தில் பதில் தேசிய ஆணையாளரும் தலைவர் பயிற்றுநருமான திரு ஆர். கிருஷ்ணராஜா தலைவர் பயிற்றுநர் சின்னத்தை திரு. நல்லையாவுக்குச் சூட்டினர். சான்றிதழை உலக சாரணர் சம்மேளனத்தின் ஆசிய பசுபிக் பிராந்தியதொடர்புப் பிரமுகர் திரு வி. பி. நாகலிங்கம் வழங்கினர்.

இது உலகிலே சாரணர் தலைவர் பயிற்சிக்கான அதி உயர்ந்த சின்னம் என்பது குறிப்பிடத்தக்கது.

யாழ் மாவட்ட சாரணர் சங்கத்தின் மாவட்ட பயிற்சி ஆணையாளராகப் பதவி வகிக்கும் இவர் யாழ். பரியோவான் கல்லூரியின் பழைய மாணவருமாவார்.

## கோழிப்பண்ணைக்கு நிதியுதவி

பண்டத்தரிப்பு

அராலி தெற்கு கிராமோலை இளைஞர் விவசாயக் கழகத்திற்கு கோழிப் பண்ணையொன்றை நிறுவுவதற்காக வட்டுக்கோட்டை தொகுதி எம். பி. திரு திருநாவுக்கரசு 25 ஆயிரம் ரூபாவை ஒதுக்கீடு செய்துள்ளார்.


# மரண அறிவித்தல்

## திருமதி எல். ஆர். திசைநாயகம்

யாழ்ப்பாணம் 63 கச்சேரி நல்லூர் வீதியைச்சேர்ந்த திருமதி லீலி இராசமலர் திசைநாயகம் காலமாகிவிட்டார். இவர் காலஞ்சென்ற ஜி. எஸ். திசைநாயகத்தின் (ஓய்வு பெற்ற பொறியியலாளர் P. W. D.) அன்பு மனைவியும், சி. ஆர். திசைநாயகம், எம். ஜே. திசைநாயகம், திருமதி வி. எல். செல்வரத்தினம், திருமதி சி. டி. ஆர். இரத்தினம், திருமதி பி. சி. ஏ. ஹண்டி, எஸ். எம். வி. திசைநாயகம், டாக்டர் எச். பி. ஜே. திசைநாயகம், ஜி. சி. திசைநாயகம் ஆகியோரின் தாயாருமாவார். அன்னரது பூதவுடல் புதன்கிழமை (25-11-81) மாலை 3 மணிக்கு அன்னரது இல்லத்திலிருந்து புறப்பட்டு 4-30 மணிக்கு செம்மணி மயானத்தை சென்றடையும். (1530)


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் சுண்டிக்குளி மேற்கு வீதி, 68-ம் இலக்கத்திலுள்ள "ஈழநாடு" லிமிட்டெட்டுக்காக யாழ்ப்பாணம், கச்சேரி நல்லூர் வீதி, 803-ம் இலக்கத்திலுள்ள கலாநிலைய அச்சகத்தில் 1981-ம் ஆண்டு நவம்பர் 23-ம் திகதி அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது. Registered as News Paper, The General P. O. Sri Lanka Regd.Q. B. 100286/81. P. O. Box 49. Jaffna. டெலிபோன்: 7707, 889, 8180.